EHJ-2-TA

# வரலாற்று நாயகர் இயேசு நாம் விசுவாசிக்கும் இயேசு தானா? நிகழ்ச்சி 2

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை குறித்த்தான செய்திதான் பெரும்பாலும் பரவலாக பேசப்பட்டு வருகிற செய்தியாக இருக்கிறது பல தேசிய பத்திரிக்கைகளின் கவனத்தை ஈர்த்துவருகிறது, குறிப்பாக டைம், நியூஸ்வீக்,மற்றும் US நியூஸ் மற்றும் வேல்ட் ரிபோர்ட். மேலும், இயேசு செமினாரின் அறிக்கைகளுக்கு ஊடகங்கள் அளவிற்கு அதிகமான இடமளித்து பெரிது படுத்துகிறார்கள் என நினைக்கிறன், தனிச்சையாக தேர்வு செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டின் வல்லுனர்கள் சிலரை கொண்டிருக்கும் சிறிய கூட்டமாக இருக்கிறது.

இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை பற்றிய விவாதங்களில் எழும்பும் கேள்விகளை குறித்து பார்க்க இருக்கிறோம் பொதுவாகவும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியிலும் இயேசுவை குறித்த பலதரப்பட்ட வரலாற்று உண்மைகள் சரித்திரத்தில் சொல்லப்படும் இயேசுதான் கிறிஸ்த விசுவாசத்தின் இயேசு என்பதை நிருபிக்கும்விதமாக இருந்து வருகிறது.

எனது விருந்தினர் உலக தரம்வாய்ந்த சித்தாந்த வாதியான Dr. ஹேபர்மாஸ், புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், வரலாற்று இயேசு. அவர் தமது Ph. D. யை மிக்கிகன் மாநில பல்கலைகழகத்தில் பெற்றார், இரண்டாவது டாக்டர் பட்டத்தை ஆக்ஸ்போர்டிலுள்ள இம்மானுவேல் கல்லூரியில் பெற்றார், இங்கிலார்ந்து. Dr. ஹேபர்மாஸ் லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தம் மற்றும் இறையியல் பாடபிரிவின் சேர்மேனாக இருக்கிறார் இவர் இயேசுவின் வாழ்கையை குறித்து நூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார் அவை சில பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்த புதிய ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இணைந்திட அழைக்கிறோம் ஏன் இயேசு ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்களில் அதிக வரலாற்று ஆதாரங்களை கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

<u>***</u>

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வணக்கம். இன்றைக்கு இயேசு செமினாரில் இருக்கிற நிறைய அறிஞர்கள் இயேசுவை குறித்த பாரம்பரிய கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை தாக்குகிறார்கள். இயேசுவை தெய்வீகமானவர் என்று சொல்வதில் அர்த்தமில்லை என்கின்றனர். இயேசுவின் உயிர்த்தெழுதல் சம்பவிக்கவில்லை என்கின்றனர். புதிய ஏற்பாட்டின் நூல்கள் இயேசுவின் வரலாற்ற பதிவுகளை எடுத்துரைக்காமல் ஆதி

கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை சுட்டி காட்டுகிறது என்கின்றனர். இயேசு செமினார் கூருகிறவற்றிற்கு எதிராக, ஆதிகால கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை உறுதி செய்திடும் பலவிதமாக வரலாற்று ஆதாரங்கள் தகவல்கள் புதிய ஏற்பாட்டிலும் பிற பதிவுகளிலும் இருப்பதை பார்க்கிறோம். இன்றைய எனது விருந்தினரான சித்தாந்தமேதை Dr. கேரி ஹேபர்மாஸ் இறை நம்பிக்கை இல்லாமல் இருந்தவர், ஆனால் அவரது Ph.D. யை மிச்சிகன் மாநிலத்தில் முடித்தார், அப்போது இயேசுவை குறித்து மறுக்க முடியாத சில திடமான வரலாற்று ஆதாரங்கள் இருப்பதை அவர் உணர்ந்துகொண்டார். அதை நீங்களும் கேட்க விரும்புகிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** கடந்த வார நிகழ்ச்சியில் நாம் பவுல் 1 கொரிந்தியர் பதினைந்தாம் அதிகாரத்தில் பதிவு செய்திருந்த பதிவுகளை பார்த்தோம். இதுதான் மைய பகுதியாக இருக்கிறது, வரலாற்று ரீதியாக பவுலின் பதிவுகளுக்கு இதுதான் மையப்பகுதியாக இருக்கிறது, அதுமட்டுமல்ல, இதில் வரலாற்று இயேசுவை குறித்த முக்கியமான பதிவுகளும் இருக்கிறது.

நாம் பேசிக்கொண்டிருந்த காரியங்களை சுருக்கமாக பார்க்கலாம். கிபி 30 சிலுவையின் சம்பவத்திலிருந்து அப்படியே கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் என்று தோராயமாக கணக்கிட்டு பார்க்கும்போது, அது 1 கொரிந்தியர் கிபி 55- 57ற்குள் எழுதப்பட்டது என்று முடிவடைகிறது. இதுக்குள்ள 25 ஆண்டுகள் இருக்கிறது. பவுல் 1 கொரிந்தியர் 15:1,2, கூறுகிறார், “நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தின் பிரகாரமாய்” – இது கி பி 51ல நடந்தது. அதை 20 ஆண்டுகள் என்று குறைத்துகொள்ளலாம். இதையே அவர் மறுபடியும் சொல்கிறார் 1 கொரிந்தியர் 15:3 அதாவது, “நான் அடைந்ததும் முந்தி உங்களுக்கு பிரதானமாய் ஒப்புவித்ததும்.” இங்கு பவுல் ஒரு காரியத்தை வெளிபடுத்துகிறார் அதாவது எருசலேமில் பேதுருவிடம், யாக்கோபிடம், இயேசுவின் சகோதரனானவன், இவங்ககிட்ட கலாத்தியர் 1 வசனம் பதினெட்டில் சொன்னதை கிபி 35ல் பெற்றிருந்தார். அதுமட்டுமல்ல, சிலுவையின் நிகழ்விற்கும் பவுல் எருசலேமிற்கு சென்றதற்கும் ஐந்து வருட இடைவெளி என்று சொல்வோமானால், இவருக்கு முன்பாக வேறொருவர் இவைகளை அறிந்திருக்கவேண்டும்.

இதை குறித்து ஒரு சில விஷயங்களை நான் பகிர்ந்துகொள்ளும்படி விரும்புகிறேன், ஆனால் கடந்த வார கேள்வியில் இருந்து ஒன்றை சொல்ல விரும்புகிறேன்: “கிறிஸ்துவத்தை துவக்கியவர் பவுல் இல்லை என்று நமக்கு எப்படி தெரியும்?”, பவுல் ஒரு முக்கியமான வார்த்தையை குறிப்பிடுகிறார், 1 கொரிந்தியர் 15:3 கூறுகிறது, “முந்தி பிரதானமாய் சொல்லுகிறேன்,” அதாவது, இதுதான் எனது மையப்பொருள் என்கிறார்.” அதுமட்டுமல்ல மேலும் அவர், “இது என்னிடத்தில் இருந்து வந்ததல்ல என்கிறார்.” பிரதானமான காரியம் இதுதான், என் அறிக்கையின் மையக்கருத்து இதுதான், நான் அடைந்ததை உங்களுக்கு ஒப்புவித்தேன்.” ஒருவேளை இதை அவன் எருசலேமில் பேதுரு யாக்கோபிடமிருந்து பெற்றிருந்தால், இது பவுலால் உண்டானது என்று சொல்ல முடியாது அதோடு இது ஆதி திருச்சபையின் முக்கிய அங்கமாக இருந்த இருவரால் சொல்லப்பட்டவைகள்: பேதுரு மற்றும் யாக்கோபு, இயேசுவின் சகோதரன்.

சரி, பவுல் சொல்வது உண்மையா? அது இந்த ஆதாரங்களோடு பொருந்துகிறதா? சரி, நாம் 1 கொரிந்தியர் 15:3 ஐ பார்க்கும்போது, இதில் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்வோம். மேலும் புதிய ஏற்பாட்டு வல்லுனர்கள் எல்லாரும் ஒருமனதாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்றால் அது இதுதான்: பவுல் இங்கு அடுத்த தலைமுறைக்கு சொல்லிடும் முக்கியமான காரியம் இதுதான், அவருடைய அறிக்கை, அதாவது, பவுல் என்ன சொல்ல வருகிறார், என்றால் அவர் இன்னொருவரிடம் இருந்து அறிந்துகொண்டதை நமக்கு தெரிவிக்கிறார், வசனம் மூன்றிலிருந்து ஐந்து வரைக்கும் வாசித்தீங்கன்னா தெரியும், சில ஏழாம் வசனம் வரை எடுத்துகொள்கிறார்கள்.

ஆனா முக்கியமானது இதுதான். இது பவுலுடைய சொந்த வார்த்தைகள் அல்ல என்பதற்கு பல விதமான ஆதாரங்கள் இருக்கிறது. அவர் என்ன சொல்லுகிறார் என்பதை விளக்கி கூறும் பல நிலைகள் இருக்கிறது – அதனால் தான் பவுலுக்கு ஒரு ஸ்தானத்தை கொடுக்கிறோம் – இதை இன்னொருவரிடமிருந்து அவர் தெரிந்துகொண்டார். உங்களுக்கு எப்படி தெரியும்? பவுலுடைய வார்த்தைகள் அல்லாத பிற ஆதாரங்கள் இருக்குது. வேறு எங்கயும் பவுல் மூன்றாம் நாளில் என்று சொல்லவில்லை. இது அவரே இங்க சொல்லியிருந்தாலும் இது அவருடைய சொந்த வார்த்தைகளோ அவரே சொல்லிய கருத்தோ அல்ல. அவர் கேட்டதை மற்றவர்களுக்கு கூறுகிறார். இவை பவுலின் வார்த்தைகள் அல்ல. பேதுருவை கேபா என்கிறார் யோயாக்கீம் ஜெரேமியாஸ், ஜெர்மானிய புதிய ஏற்பாட்டு வல்லுநர், இது அராமிய மொழியின் வார்த்தையாக இருக்கிறது அதனால் இது பவுலின் நாட்களும் முன்பு சொல்லப்பட்ட காரியம் என்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இயேசு செமினரியில் இருக்கும் சில அறிஞர்கள் அப்போஸ்தலனாகிய பவுல்தான் இயேசுவை குறித்த விசுவாசத்தை உருவாக்கியவர் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுகிற காரியம் என்னவென்றால் இயேசு தேவன் என்று பவுல் ஒரு கட்டுகதையை உருவாக்கியதாக சொல்கிறார்கள். அதற்கு முன்பு, இப்படி சொல்லப்படவில்லை. ஆனால் Dr. ஹேபர்மாஸ் பவுல் கிறிஸ்துவத்தையோ கிறிஸ்துவ விசுவாசத்தின் கிறிஸ்துவையோ உருவாக்கவில்லை என்ற கருத்தை வரலாற்று உண்மைகளோடு நமக்கு தெளிவாக விளக்கி கூறுகிறார். கவனியுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சரி, பவுல் சில முக்கியமான காரியங்களை சொல்லியிருக்கிறார். அதாவது, “நான் அடைந்ததை உங்களுக்கு ஒப்புவிக்கிறேன்” – என்னை கவர்ந்த வார்த்தை, - பிரதானமாய் ஒப்புவிக்கிறேன்.” பவுல் சொல்கிறார் நான் பிரசங்கிக்க கூடிய மிக முக்கியமான அடித்தளமான ஒன்று இதுவாகத்தான் இருக்கும். அது மட்டுமல்ல, முதல் இரண்டு வசனங்களில் அவர் சொல்கிறார் இதை ஏற்றுகொண்டால் இரட்சிக்கப்படுவீர்கள். இல்லாவிட்டால், இரட்சிப்பு இல்ல. இப்ப நாம நடுபகுதியில் இருக்கிறோம்.

மேலும் அவர் சொல்கிறார், “நான் அல்ல”. பவுல் கண்டுபிடிப்பாளர் கிடையாது. சரி, இதை தான் இங்கு பார்க்கிறோம். இந்த பகுதி பவுலை பற்றிய ஆதாரத்தை கொண்டிருக்கிறதா, ஏதாவது கடந்து போகிறதா, வேறு யாரிடமிருந்தாவது இதை

பெற்றுக்கொண்டு வந்தாரா? வேறுவிதமாக சொன்னால், பவுல் இதை திரும்ப திரும்ப சொல்கிறார் ஆனால் இது இவர் உருவாக்கிய ஒரு கதை இல்லை. இப்ப, இந்த வார்த்தைகளை பார்க்கலாம், இது பவுலிடம் இருந்து வந்தது கிடையாது என்பதை உணர்த்தும் வசனங்களை பார்க்கலாம்.

உதாரணமாக, வேதவாக்கியங்களின் படி கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவை மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார்."பவுல் மறுபடியும் மறுபடியும் தன்னுடைய சொந்த வார்த்தைகளை இதுல சேர்ப்பதை பார்க்கவே முடியாது, சுவிசேஷத்தை பற்றி விவரிக்கும் போதெல்லாம், ஒன்றை சேர்த்துகொள்கிறார், கடந்த வாரம் நான் சொன்னது போல, கிறிஸ்துவின் தெய்வத்தும், மரணம், உயிர்த்தெழுதல்."இதில் அவர் அடக்கத்தை அதிகமாக சேர்ப்பது இல்ல. அப்ப இங்க பவுலுடைய வார்த்தைகள் அல்லாத வார்த்தைகளும் இருக்கிறது.

இன்னொரு அடையாளமும் இருக்கு, பேதுருவின் பெயர் கேபா. இப்ப, பவுல் பேதுருவை கேபா என்று சொல்லுகிறார், ஆனால் பேதுரு பேதுருவாக ஜெரேமியாஸ் என்று அதிகமாக சொல்லப்பட்டு இருக்கிறார், ஜெர்மானிய புதிய ஏற்ப்பட்டு வல்லுனர்கள், இந்த ஒரு அடையாளத்தை கொண்டு சில ஆராமிய மூல பாஷையின் வார்த்தைகள் இருக்கும் என்று சிந்தித்து கொண்டு இருக்கிறார்கள்.

பிஞ்சாஸ் லபிடீ, பழமைவாத யூத புதிய ஏற்பாட்டு வல்லுநர், இந்த பாரம்பரியத்தை கடத்துவதற்கு மேலும் பல அடையாளங்கள் ஆதாரங்கள் இருப்பதாக கூறுகிறார்.

உதாரணமாக, ட்ரிப்பிள் ஹாட்டி கிளாஸ் என்று அழைக்கப்படுவதை பார்க்கலாம். ஆங்கில மாணவர்கள் அதை புரிந்துகொள்வார்கள்: மேலும், மேலும், மேலும். பவுல் இந்த முழுமையான வரியை சொல்லி முடிக்காமல் அவர் அதை பாதியில் விட்டுவிட்டு வரவில்லை: "... வேத வாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் **மேலும்** அடக்கம் பண்ணப்பட்டார் **மேலும்** உயிரோடு எழுந்தார் **மேலும்** அவர்களுக்கு காணப்பட்டார்." Dr. லபிடீ சொல்லும்போது எபிரேய மொழியில் கதைபோல சொல்கிறார்கள் என்றார்.

இங்கு நான் பெற்றுகொண்டத்தை ஒப்புவித்தேன் என்ற வார்த்தைகள் அடுத்தவர்களுக்கு எடுத்து சொல்வதை குறிக்கிறது. பவுல் மீண்டும் இதை 1 கொரிந்தியர் 11ல் சொல்கிறார் கர்த்தருடைய பந்தியின் போது – உங்களுக்கு ஒப்புவிதத்தை பெற்றுகொண்டேன்." ஆகவே, இது பவுலினுடையது அல்ல என்பதற்கு மூன்று நான்கு ஆதாரங்கள் இருக்கிறது.

ஒரு சமயத்தை அல்லது பாரம்பரியத்தை அறிந்துகொள்வது எப்படி? இவை இரண்டு அருமையான விதங்களில் இருக்கிறது என்று வல்லுனர்கள் கூறுகின்றனர் ஆனால் இது ஆங்கில இலக்கிய கவிதையை போல இல்லை என்றும், முதல் நூற்றாண்டின் யூத மக்களுக்கு புரிகிற அளவிற்கு எழுதப்பட்டது என்றும் கூறுகிறார் அவர் காட்சியளித்தபோது, இயேசு தனிநபர்களுக்கு முதலில் காட்சியளித்தார், பேதுரு, அடுத்து குழுவினரான, பன்னிரண்டு பேர், அடுத்து ஒரே நேரத்தில் 500 பேர். அடுத்த அவர் யாக்கோபுக்கு வெளிப்பட்டார் , இதுவும் தனினபர்தான். அடுத்து அவர் ஒரு கூட்டத்திற்கு

தன்னை வெளிபடுத்தினார். இதற்கு சில நிலைகள் இருக்கிறது மேலும் இவை மத இலக்கண முறையில் அமைந்திருக்கிறது.

நான் கடந்த வாரம் ஒரு விஷயத்தை சொன்னேன், கிட்டத்தட்ட தொண்ணூறு சதவிகித பாலஸ்தீனர்கள் மற்றும் அங்கிருந்த யூதர்களுக்கு படிக்க தெரியாது, அவர்கள் கல்வி பெற்றவர்கள் அல்ல, அப்ப செய்தியின் சாராம்சத்தை எப்படி கொடுக்க முடியும், "முதன்மையான காரியம்" படிக்காதவர்களுக்கு இப்படி சொல்லலாமா? அவர்கள் மனப்பாடம் செய்து திரும்ப சொல்லும் விதத்தில் அவர்களுக்கு ஏற்றவாறு சொல்ல வேண்டும். இதுதான் மத போதனைகளின் பகுதிகளாகும். அதேமாதிரி பவுல் இங்க தனது செய்தியின் சாராம்சத்தை அவர்களுக்குள் அனுப்புகிறார், அதாவது, நான் உங்களிடம் வந்தபோது பிரசங்கித்தவை."என்ன சொல்கிறார் என்றால், ஜனங்களே, இது என்னுடையது அல்ல."

இங்க நிறைய விஷயங்களை நாம ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்:முதலில் சொல்லப்பட்ட செய்தியின் முக்கியத்துவம்; நம்மிடம் உள்ள பதிவுகள் – கிபி 30 இயேசுவின் நாட்களில் இருந்து ஒவ்வொன்றாக எல்லா பதிவுகளும் இருக்கிறது. இது பவுலுடையது அல்ல. ஆகவே புதிய ஏற்பாட்டின் செய்திகளை உருவாக்கியவர் பவுல் என்பது தவறான கருத்து.

1 கொரிந்தியர் 15:11, மறுபடியுமா, கடந்த வாரம் பார்த்தது போல, பவுல் கூறுகிறார், "நானாகிலும் அவர்களாகிலும் இப்படியே பிரசங்கித்துவருகிறோம் நீங்களும் விசுவாசித்து வருகிறீர்கள்." வருகிறோம் என்பது அப்போஸ்தலர்களை குறிக்கிறது. அவர் சொல்லுகிறார், "அவர்களிடமிருந்து வருவது, என்னிடமிருந்து வருவது.நாங்கள் ஒரே செய்தியை தான் பிரசங்கிக்கிறோம்." எதை பற்றி? பொதுவாக சுவிசேஷத்தையும் உயிர்த்தெழுதலையும் வெளிப்பட்டார் என்றும் சொல்கிறார்கள்.

பவுல் என்ன சொல்கிறார், "இதை நான் உருவாக்கவில்லை. இதை இன்னொருவரிடம் இருந்து பெற்றுகொண்டேன். நான் பெற்றுகொண்டதை உங்களுக்கு ஒப்புவிக்கிறேன்." இப்ப, வசனம் 11ஐ கவனியுங்கள்: "ஆகையால் நானாகிலும் அவர்களாகிலும் இப்படியே ப்ரியாசங்கித்துவருகிறோம் நீங்களும் இப்படியே விசுவாசித்து வருகிறீர்கள்." என்னை பொறுத்தவரை பவுல் என்ன சொல்கிறார் என்றால், "சீஷர்களை கேட்டுபாருங்கள். நான் உங்களுக்கு சொல்லுகிற காரியங்களை தான் அவர்களும் உங்களுக்கு சொல்லுவார்கள். என்னை கேளுங்கள் நானே சொல்கிறேன் என்கிறார்."

சரி, அந்த செய்தி என்னது? முந்தின வசனங்களை பாருங்கள். அதுதான் சுவிசேஷம், குறிப்பாக சொன்னால், அவர் வெளிப்பட்டதை பற்றி இங்கு பேசிக்கொண்டு இருக்கிறார். அவர் சொல்கிறார், "நான் அவர்களிடம் பேசினேன். அவர்களும் நான் சொல்கிற காரியங்களைத்தான் சொல்கிறார்கள். அவர்கள் என்னோடு பேசினார்கள். சிலவற்றை பரிந்துரைத்தார்கள் என்கிறார்." மறுபடியுமா காலத்தியர் இரண்டாம் அதிகாரத்தை பாருங்கள்.

இதினிமித்தமாகதான் வரலாற்றில் நமக்கு சிறப்பான ஸ்தானம் இருக்கிறது எல்லாவற்றையும் முன்பாக நிறுத்தி பவுல் சொல்வதை முன்னிறுத்தி அவருடைய

தகவல்கள் அனைத்தும் வரலாற்றின் கால சமயங்களோடு ஒத்துபோகிறது என்று சொல்ல முடியும். பக்கங்கள் வார்த்தைகளால் நிறைந்திருக்கிறது. அவர் சிறந்த செய்தியாளராக காணப்படுகிறார். நமகென்று ஒரு கால நிலைகளை பெற்றிருக்கிறோம், நேயர்களே, சுவிசேஷம் ஒரு கால நிலைகளை உண்டாக்கிடவில்லை. இவை அனைத்தும் இக்கட்டான நிலைகளில், சுவிசேஷமற்ற இறையியலின் மத்தியில் உண்டாயிருக்கிறது. இந்த சில விதங்களை பயன்படுத்தி நம்முடைய இருதயத்தின் உறுதியான விசுவாசத்தை நிலைபடுத்திட முடியும் என்று நினைக்கிறேன்- அதுதான் இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி நீங்கள் ஒரு மாணவனாக இருந்தால், உங்களுடைய பள்ளி நாட்களில் எத்தனை முறை நீங்கள் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் ஒரு கட்டுக்கதை ஒரு நாவல் என்று சொல்லப்படுவதை கேட்டிருக்கிறீர்கள்? சரி, அதெல்லாம், உண்மை அல்ல. Dr. ஹேபர்மாஸ் இயேசுவை குறித்த வரலாற்று ஆதாரங்கள் திடமாக இருக்கிறது என்று வல்லுனர்கள் சொல்வதற்கு ஆதாரமான மூன்று காரணங்களை கூறுகிறார்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சரி, என்னை பொறுத்தவரை நாம கொஞ்சம் பின்னால போய் உண்மையாகவ் 1 கொரிந்தியர் 15ம் அதிகாரத்தின் பகுதிகள் என்ன சொல்கிறதென்று பார்க்க வேண்டும். ஒருவேளை பவுல் இந்த காரியங்களை கிபி 35ல் கொடுத்திருந்தால் அப்பத்தான் எருசலேமிற்கு போனாரோ – கலாத்தியர் 1:பதினெட்டு கூறுகிறது அவர் பேதுருவையும் யாக்கோபையும் சந்தித்தார், இவர் இயேசுவின் சகோதரன், அப்படின்னா இரண்டு முக்கியமான காரியங்களை வலியுறுத்தும் ஆதிகால ஆவணங்கள் நம்மிடம் இருக்கிறது.

முதலாவதாக, இந்த காரியங்கள் ஏற்கனவே இருந்திருக்கிறது. மற்ற கிரேக்க ரோம பதிவுகள் இல்லாமல் இது எப்போதிலிருந்து இருக்கிறது என்று உறுதியாக சொல்ல முடியாது. அதாவது, லிவி தனது காலத்திற்கும் முன்பு சும்மார் நூறு வருடங்களின் காரியங்களை பதிவு செய்திருக்கிறார். பவுலோ அந்த நிகழ்வு நடந்த ஐந்த வருடங்களில் தனக்கு உண்டான அனுவத்தில் இருந்து பேசிக்கொண்டு இருக்கிறார். மேலும், அவருக்கு முன்பே மற்றவர்களுக்கு இந்த அனுபவம் இருக்கிறது. அப்ப, அதாவது, இங்க இருக்கிற இடைவெளியை நாம குறைத்துதான் ஆகவேண்டும்.

இரண்டாவதாக, இங்கு கண்ணார கண்ட சாட்சிகள் இருக்கிறார்கள். அதாவது இந்த சாட்சிகளை நம்பி செல்வது சிறந்ததாகும். சுவிசேஷங்களை பற்றி பேசினோம், அது ஒரு சாத்தியகூறு; ஆனால் பவுல் சொல்வதை கேட்கும் போது நம்மிடம் என்ன இருக்கிறது விமர்சகர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று புரிந்துகொள்ள முடியும். பவுல் தன்னில் தானே ஒரு சாட்சியாக இருக்கிறார். மரங்களுக்காக காட்டை இழந்திடவேண்டாம். பவுல் சொல்கிறார், "உயிர்த்தெழுந்த இயேசுவை நான் சந்தித்தேன்."

ஆனா இங்க பேதுருவும் இருக்கிறார், யாக்கோபும் இருக்கிறார், இயேசுவின் சகோதரன். அவர்கள் இருவருமே, ஒரு விதத்தில், பவுல் சொல்கிற அவருடைய வெளிப்படுத்தலை பார்த்திருக்கிறார்கள் 1 கொரிந்தியர் 15 – கலாத்தியர் 1 மற்றும் 1 கொரிந்தியர் 15ற்கு இன்னொரு தொடர்பும் இருக்கிறது. அங்கிருந்த ஜனங்களை பற்றிதான் நாம

பார்த்துகொண்டு இருக்கிறோம். பேதுருவை பார்த்து அவர் என்ன சொல்கிறார் என்பதை அறிந்துகொள்ள பவுல் ஆர்வமாக இருந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

சரி, அந்த கேள்வியை மறுபடியும் பார்க்கலாம், பவுல் இதை தாமே உருவாக்கி சொன்னாரா? என்னுடைய பதில், “இல்லை” ஏன்னா “ இதுதான் பிரதானமானது என்கிறார்,” இதை வேறொருவரிடம் இருந்து பெற்றுகொண்டார்.

இந்த காரியங்களை இதே மாதிரி புரிந்துகொள்ள இன்னொரு விதத்தையும் நாம் பயன்படுத்த முடியும் அப்போஸ்தலர்களின் செய்தியின் தொகுப்பை பார்க்கலாம். ஒரு சுவிசேஷகனிடம் நீங்கள் கேட்டு பாருங்கள், “புதிய ஏற்பாடு கிடைப்பதற்கு முன்பு ஆதிகால பிரசங்கங்கள் எந்த மாதிரியாக இருந்தது? அதற்கு அவர்கள் பதில், “எளிமையானது. அப்போஸ்தலரை வாசியுங்கள் என்பார்கள்.” சில விமர்சகர்களை கேட்டாலும் இதையே சொல்வார்கள் :ஹே, அப்போஸ்தலர் 1-5 அதிகாரத்தை வாசி”

சரி, விடை ஒரே மாதிரி இருந்தாலும் அதற்கான காரணங்கள் வெவ்வேறாக இருக்கிறது. சுவிசேஷகர்கள் அதை முழுவதுமாக நம்புவதால் அப்படி சொல்கிறார்கள். விமர்சகர்கள் இந்த ஆதிகால வாய்மொழி அறிக்கைகள் பாரம்பரிய மதம் சார்ந்த பகுதிகள் என்று சொன்னாலும், இதற்கு ஒரே காரணத்தைதான் பார்க்கிறார்கள் – மற்றொரு ஆதாரம் என்னவென்றால் இது சமயத்தை சார்ந்திருக்கிறது – இதுதான் சிறந்தது என்று நம்புகிறார்கள், நம்பத்தகுந்தது, இதில் இறையியலும் கலந்து இருக்கிறது, துல்லியமாக யதார்த்தமாக இருக்கிறது. மேலும் ஒருசில இடங்களில் அப்போஸ்தலர் புஸ்தகத்தில் பேதுரு கூறுகிறார் – யூத தலைவர்களை அவர் சுட்டி காட்டி பேசுகிறார் என்பது புரியும்.”நீங்கள் அவரை கொலைசெய்தீர்கள்! தேவனோ அவரை மரித்தோரில் இருந்து உயிரோடு எழும்ப செய்தார்!”

இப்ப, இதுல, ஒரு சின்ன காரியத்தை கவனிக்கணும், சுவிசேஷத்தை பெறுகிறீர்கள், சரியா? கர்த்தராகிய இயேசுவை குறித்து பேசப்படுகிறது. அவர் சாதாரண மனிதர் அல்ல. “நீங்கள் அவரை கொலை செய்தீர்கள். தேவன் அவரை எழுப்பினார்” – இங்க சுவிசேஷம் தெளிவாயிடுச்சு பேதுரு அதற்குள்ளாக இருந்து செயல்படுகிறார். இதை நினைவில் வைத்துகொள்வது மிகவும் சுலபம்.

இன்னொன்றும் இருக்கிறது, “நாம் மனிதனுக்கு கீழ்படிவதை விட தேவனுக்கு கீழ்படிவது அவசியம்.” சரி, இது சுவிசேஷம் இல்லை என்றாலும் இது சில பலமொழிகளில் ஒன்றாக இருக்கிறது. அப்போஸ்தலர் ஒன்று முதல் 5 வரைக்கும் பாருங்க, அப்போஸ்தலர் 10, பேதுரு கொர்நேலியசுக்கு பிரசங்கிக்கிறார். இதெல்லாம் பேதுருவின் போதனைகள்: அப்போஸ்தலர் 1 முதல் 5; அப்போஸ்தலர் 10. மேலும் அப்போஸ்தலர் 13, பவுலின் போதனை, அங்கு சமயத்தை குறித்த சில போதனைகள் இருப்பதாக வல்லுனர்களும் நம்புகிறார்கள். நீங்களே இதை எல்லாத்தையும் வாசித்து பாருங்கள் அதுல என்ன தெரிந்துகொள்வீர்கள் என்று நான் உங்களுக்கு சொல்லுகிறன். சுவிசேஷத்தின் சின்னசின்ன விஷயங்களில் கூடா கிறிஸ்துவின் தெய்வத்துவத்தையும் அவரது மரணம், உயிர்த்தெழுதலை பார்ப்பீர்கள்.

உங்களுக்கு ஒன்னு தெரியுமா. பவுல்தான் இதன் ஆக்கியோன் என்று யாராலும் சொல்ல முடியாது. ஆகவே இங்கு ஆதி போதனைகளை உள்ளடக்கிய காரியங்களை பார்க்கிறோம். அப்போஸ்தலர் 9 ம் அதிகாரம் வரைக்கு பவுல் யாருன்னே தெரியாது. முதல் ஐட்ன்ஹு அதிகாரங்களில் ஆதி திருச்சபையில் சொல்லப்பட்ட அதே விஷயங்களை தான் பார்க்கிறோம். அங்க பவுல் இல்லை. இருந்தாலும் அப்போஸ்தலர் நடபடிகளை பார்த்து, இதுதான் பிரதானமானதென்று சொல்லமுடியும், இயேசு எப்படி மரித்தார், அவர் உயிரோடு எழுதார், இயேசு என்று ஒரு நபராக இருப்பதைவிட, அவர் தேவனாக இருந்தார் அவர்தான் கிறிஸ்து. இதற்கு இன்னும் இரண்டு பிரபலமான தலைப்புகள் இருக்கிறது.

இப்ப, அப்போஸ்தலர் என்ற கண்ணோட்டத்தில் இருந்து முன்னேறி சென்றாலும், சமயம் சார்ந்தவற்றை பார்க்க முடியும், சுவிசேஷம் என்று நாம் சொல்கிற இறையியல் காரியங்களின் சுருக்கமும், பரிணாம வளர்ச்சியையும், துள்ளியமான நிலைகளையும் பார்க்கலாம் ஆனால் அங்கு பவுல் இல்லை. ஆகவே உபதேசத்தின் மையக்கருத்து என்று கூறுகிற மற்றொரு கண்ணோட்டமும் இருக்கிறது, கிறிஸ்தவ சமயத்தின் மையப்பொருள், அதுதான், சுவிசேஷம், இரட்சிப்பு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, ஒவ்வொரு கிறிஸ்தவ மாணவர்களும் எப்படி Dr. ஹேபர்மாஸ் விவாதிக்கிறார் என்பதை கவனிக்க வேண்டும். கிறிஸ்தவர்களாக, நாம் அனைவரும் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களை அதிகாரமுடைய சத்தியங்களாக ஏற்றுகொள்கிறோம். ஆனால் உங்களுடைய கிறிஸ்தவரல்லாத பேராசிரியர் நண்பர்கள் அப்படியில்லை. அப்படியென்றால், அவர்களோடு பேசும்போது நீங்கள் எந்தமாதிரியான ஆதாரத்தை பயன்படுத்துவீர்கள்? உங்கள் பேராசிரியரும் நண்பர்களும் நவீனகால அறிஞர்களை பற்றி சொல்லும்போது, அவர்கள் பவுலின் சில நிருபங்களும் நான்கு சுவிசேஷத்தின் சில பகுதிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள், அங்கீகரிக்கப்பட்டதாக அல்ல, ஆனால் வரலாற்று ரீதியான தகவல்கள் இருக்கிறது என்கின்றனர். சரி, அதை ஒப்புக்கொண்டால், அதையே நாமும் பயன்படுத்தி இயேசு வாழ்ந்தார் என்பதற்கான வரலாற்று ஆதாரத்தையும், தம்மை தேவன் என்று சொன்னதையும், சிலுவையில் மரித்து, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு, பிறகு தமது சீஷர்களுக்கு தோன்றினதையும் சொல்ல முடியும். இவை வரலாற்று நிகழ்வுகள் இதை மறுக்க முடியாது. சரி, ஒருவேளை நீங்கள், இந்த காரியங்களை நமக்கு எடுத்து சொல்லும் எந்த பகுதிகளை விமர்சக அறிஞர்கள் ஒப்புகொள்ளுகிறார்கள் என்று கேட்கலாம். Dr. ஹேபர்மாஸ் அதை விளக்குகிறார்:கவனியுங்கள்

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சரி, இப்ப நாம பின் வாசலுக்கு போனது போல இருக்கிறது. திடமான ஆதாரமாக கருதப்படும் பகுதியில் துவங்கினோம்- 1 கொரிந்தியர் 15; பவுலின் மறுக்கமுடியாத நிருபங்கள். இப்ப பின்னால போயிட்டு இருக்கிறோம். பேதுரு மற்றும் யாக்கோபை பவுலின் கண்களின் மூலமாக பார்த்துகொண்டு இருந்தோம், கலாத்தியர் 1. அதோடு அப்போஸ்தலர் நடபடிகளில் பேதுருவின் சுவிசேஷத்தை பற்றிய கூற்றுகளை கவனித்தோம். இப்ப, இதையெல்லாம் பார்த்தபிறகு, ஏன் விமர்சக சமூகத்தினர் அடிப்படியாக சுவிசேஷத்திற்கு எந்தவித மதிப்பும் இல்லை என்று சொல்கிறார்கள் என்று

புரிகிறதா? நல்ல கேளுங்க, “விமர்சக சமூகத்தினர்” அதாவது தூரமா இருக்கிறவர்கள். நடுத்த சமூகத்தினர் ஒரு கூட்டம் இருக்கிறார்கள் அவர்கள் சிறந்த செல்வாக்கு பெற்ற மேதைகளாக இருந்தாலும் நாம் இவர்கள் மூலமாக கேள்விப்படும் காரியங்களை அவர்கள் மறுத்து பேசுவது கிடையாது, அவர்களை தான் தங்களை மெயின் ஸ்ட்ரீம் ஆட்கள் என்று சொல்லிகொள்கிறார்கள்.

சரி, நாம சுவிசேஷங்களை பார்க்கும்போது, ஒரே செய்தியை திரும்ப திரும்ப கேட்க்கிறீர்களா அல்லது வேறு ஏதாவது இருக்கா? இதை பார்ப்பதற்கு முன்பு, இன்னொரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். 1 கொரிந்தியர் சுவிசேஷங்களுக்கு முன்புள்ள தேதியை பெற்றிருக்கிறது. அதாவது 1 கொரிந்தியர் 15 உயிர்த்தெழுதலை பற்றி நான்கு சுவிசேஷங்களில் சொல்லப்படுவதற்கு முன்பே பதிவு செய்யப்பட்ட ஒன்றாகும். அப்படின்னா, சுவிசேஷங்கள் இதற்கு பின்னால் வந்திருந்தாலும் இங்க வண்டிக்கும் முன்னாலதா குதிரை மாட்டப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே நீங்க பவுலின் நிருபங்களில் பார்த்திருந்தும், பிறகு அப்போஸ்தலர்களில் பார்த்திருந்தும், பவுலின் முதன்மையான ஆவங்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் தனித்து இருக்கும்போது அதை மட்டும் நிராகரிப்பது ஏன்?

சரி, இயேசுவை பற்றி பார்க்கும்போது, சுவிசேஷங்களில் இதைதான் பார்ப்பீர்கள். இதே அறிக்கைகள்தான் இருக்கும். அதாவது, பவுல் ஏதோ அமடீரஸ் பற்றி சொல்லவில்லை மேலும் இயேசுவை அறியாத ஜனங்களோடு அவர் பேசவும் இல்லை. அவர் பேதுருவோடு பேசினார். அவரே யாக்கோபோடு பேசினார். அவர் எருசலேமிற்கு திரும்ப வருகிறார், அதுமட்டுமல்ல, அடுத்த அதிகாரத்தில் இந்த இரண்டு நபர்கள்தான் – பேதுருவும் யாக்கோபும், இங்க யோவானும் இருக்கிறார், அப்போஸ்தலனாகிய யோவான். இங்க, பவுலுக்கு ஒரு இணைப்பு கிடைக்கிறது.

இயேசுவையும் சுவிசேஷத்தையும் மட்டும் தனித்து பார்க்கும்போது, பவுல் இயேசுவின் தெய்வத்துவத்தை உருவாக்கவில்லை என்பது புரிகிறது. இந்த தலைப்புகள் அனைத்தும் அப்போஸ்தலரில் ஆதியில் சொல்லப்பட்ட காரியங்கள் என்பதை பார்க்கமுடியும், இதையே சுவிசேஷங்களிலும் பார்க்கிறோம். சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை பற்றி சொல்ல இரண்டு திடமான நிலைகள் இருக்கிறது என்றால் அது இயேசு தன்னை பற்றி சொன்னதுதான்: மனுஷ குமாரன் மற்றும் தேவ குமாரன். சரி, தேவ குமாரன் என்பது தேவத்துவத்தின் தலைப்பை உறுதி படுத்துவதாக இருக்கிறது. மனுஷ குமாரன், இதில் பெரும்பாலான ஜனங்கள் புரிந்துகொள்ளத காரியம் என்னவென்றால், இது மரியாளின் மகன் என்ற அர்த்தத்தை கொண்டது அல்ல. மனுஷ குமாரன் என்பது மனிதனை குறிப்பது அல்ல. மனுஷ குமாரன், அநேக வல்லுனர்கள் இதை சரியாக புரிந்துகொண்டிருக்கிறார்கள், இயேசு தமக்கு தானியேல் 7:13 மற்றும் 14 பகுதி தெரியும் என்கிறார், அங்கு தானியேல் பூர்வமுதலாய் இருக்கிறவரை பார்க்கிறேன் என்கிறார், இறங்கி வருகிறவர் மனுஷ குமாரனுக்கு ஒப்பாக இருக்கிறார் என்றார், இயேசுவின் காலத்தில் வாசனைகளோடு எந்தவித ஐக்கியமும் இல்லாத அந்த காலத்து யூத புத்தகங்களில் இந்த காரியம் சேர்த்து எழுதப்பட்டு வந்தது என்று கூறப்படுகிறது.

ஆனால் அதை வாசித்தவர்கள் மனுஷகுமாரன் ஒரு நபர் என்பதை புரிந்துகொண்டார்கள். எசேக்கியல் புத்தகத்தின் தீர்க்கதரிசியை போன்ற ஒருவர்; அல்லது பூர்வமுதலாய் இருக்கிற மனுஷகுமாரன் இறங்கி வருவது போல இருக்கலாம்; தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்த ஆதிமுதலாய் இருக்கிற தெய்வீக தன்மையுள்ள ஒரு தீர்க்கதரிசன நபராக இருக்கலாம். இதில் எதை இயேசு தம்மை குறித்து சொன்ன வார்த்தை? குறைந்தது இரண்டு முறையாவது சுவிசேஷங்களில் இயேசு தம்மை குறித்து சொல்லும்போது மனுஷ குமாரன் என்று சொல்லுகிறார்- அவற்றில் ஒன்று மாற்கு பதினான்காம் அதிகாரம், அங்கு அவர் தானியேல் 7:13-14ஐ சொல்லி அது நான்தான் என்கிறார்." அந்த நேரத்தில், யூதர்களின் ஆசாரியன் கேட்க்கிறான், "நீர் கிறிஸ்துவா, ஸ்தோத்தரிக்கப்பட்டவரின் குமாரனா?" இயேசு செய்ததை கவனியுங்கள். "நீர்தான் கிறிஸ்துவா" – மேசியா – தேவனுடைய குமாரனா"? அதற்கு இயேசு சொன்னார், "ஈகோ ஈமி." நான் அவர்தான். அப்பறம் தேவ குமாரனா என்ற கேள்வியை மனுஷ குமாரன் என்ற பதிலாக மாற்றுகிறார். அதற்கு அவர்," நான் கிறிஸ்துதான், தேவனுடைய குமாரன்தான், இதோ மனுஷகுமாரன் வானத்தின் மேகங்கள் மேல் நியாயந்தீர்க்கும்படி வருகிறதை காண்பீர்கள் என்றார்." அதற்கு பிரதாக ஆசாரியன் இவன் தேவதூஷணம் சொல்கிறான் என்று அலறினான். தன்னுடைய உடையை கிழித்தான்.மேலும் அவன், "இதற்கு மேல் சாட்சிகள் என்னத்திற்கு. இது போதுமே என்றான்"

இங்க, எது அவரை நிர்ணயம் செய்தது? மாற்கு பதினான்காம் அதிகாரத்தின் பகுதியில், இயேசு சொல்கிறார், ஈகோ ஈமி, நான் தேவ குமாரன்தான்." மேலும் அவர் சொல்கிறார், " மனுஷ குமாரன் வானத்தின் மேகங்கள் மீது வருவதை காண்பீர்கள்." முதலாவதாக இவர் தானியே 7: 13-14 வசனங்களை குறிப்பிடுகிறார். அவர் தன்னை பூர்வமுதல் தேவ ராஜ்ஜியம் ஸ்தாபிக்க பட்டதுமுதல் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளவர் என்கிறார். இரண்டாவதாக, இந்த புதிரான பதத்தை சொல்லுகிறார், "மேகங்கள் மீது வருவதை." தெய்வத்துவத்தை குறித்து சொல்லுகிற இடங்களில் பலமுறை இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இங்கு இயேசு கூறுகிறார், "அது நான்தான்." ஏற்கனவே சொல்லீட்டாரே, "ஈகோ ஈமி" என்று மனுஷ குமாரனை பற்றி சொன்னாரே, அதற்கு ஆசாரியன் – இதற்காகவே அவன் காத்துகொண்டு இருந்தது போல – பிரதியுத்திரமாக, "நல்லது. இவனை பிடித்துவிட்டோம். நீங்க எல்லாரும் வீட்டுக்கு போகலாம் என்றான்."

இப்ப, இயேசுவே தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்ல இயேசுவே தன்னை மனுஷ குமாரன் என்று சொல்லியிருக்க, எதற்காக நாம் பவுல்தான் கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை உண்டாக்கினான் என்று யோசிக்க வேண்டும்? அதை சுவிசேஷங்களில் பார்க்கிறோம். அப்போஸ்தலரில் இருக்கும் சுவிசேஷத்தின் சிறு பகுதிகளிலும் பார்க்கிறோம். அதை 1 கொரிந்தியர் 15திலும் பார்க்கிறோம். கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை பற்றி சொல்லும் திடமான ஆதாரமாக இதை பார்க்கிறேன். இன்னொன்றும் நினைவிருக்கட்டும், கிறிஸ்து மரணத்திலிருந்து உயிரோடு எழுப்ப பட்டார் என்றால், இப்ப இன்னொரு கேள்வி உங்க முன்னால நிற்கும், "தேவன் ஏதாவது சொல்லியிருக்காரா? பாரம்பரியமாக கிறிஸ்தவம் என்ன சொல்கிறதென்றால், புதிய ஏற்பாட்டிலிருந்து பார்க்கும்போது, உண்மையில், தேவன் இயேசுவை எழுப்பினார்

என்பது உறுதியாக தெரிகிறது. இயேசு தெய்வத்துமானவர் என்று சொல்லும்போது, இதுல தேவ தூஷனத்திற்கு எந்த இடமும் இல்லை. அப்ப உயிர்த்தெழுதல் என்பது இயேசுவை அங்கீகரித்து தேவன் அளித்திருக்கும் முத்திரை இதைதான் பேதுரு அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் எடுத்து சொல்கிறார். இதையே அப்போஸ்தலர் பதினேழாம் அதிகாரத்தில் பவுல் கூறுகிறார். இதையே ரோமார் ஒன்றாம் அதிகாரத்திலும் பவுல் கூறியிருக்கிறார். உயிர்த்தெழுதல் தான் தலைகல். பவுல் சொன்னதுபோல, அதுதான் முதன்மையானதாக முக்கியமாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப, ஒருவேளை ஜீசஸ் செமினறி மக்கள் Dr. ஹேபர்மாஸ் சொல்வதை கேட்டுக்கொண்டு இருந்தால், அவர்கள் பதில் என்னவாக இருக்கும்? அதையும் சொல்கிறார். கேளுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** இந்த நிகழ்ச்சியில் பவுலின் காலத்தை பற்றி சிலவற்றை பார்த்துகொண்டு இருக்கிறோம் அது கிபி 57ல இருந்து பின்னாக சென்று 30 வரைக்கும் பார்க்கும்போது குறைந்தபட்சம் இருபத்தி ஐந்து வருடங்கள் இருக்கிறது. பவுல் பேதுருவோடும் யாக்கோபோடும் சுவிசேஷத்தை பற்றி பேசிக்கொண்டு இருந்தார் என்று சொல்லியிருந்தேன். அதற்கு பிறகு சுவிசேஷத்தின் சிறு பகுதியை பற்றி பார்த்தோம், சில பாரம்பரியங்கள், அப்போஸ்தலரை பார்த்தோம். இதே சில காரியங்களை சுவிசேஷங்களிலும் பார்க்க முடியும் என்று சொன்னேன். இப்போதும் உங்களுக்கு சொல்லுகிறேன், விமர்சகர்கள் என்ன முடிவிற்கு வருவார்கள் என்று என்னால் சொல்ல முடியும். ஹேபர்மாஸ் சுவிசேஷ பாடங்களை கொலை செய்கிறார் என்பார்கள். அப்படி அவர்கள் நினைக்க காரணம் இயேசு சொன்ன செய்திகள் சுவிசேஷத்தில் இருக்கிறது என்கிறார்கள் உண்மையில் சிலவற்றை சொல்லி இருக்கிறார். தெய்வத்துவமானவர் என்று சொல்லி கொள்வதை விட வேறு என்ன இருக்க போகிறது? கிரேக்கர்களை பாருங்கள். ரோமானியர்களை பாருங்கள்.

உண்மையில், நம்முடைய அடுத்த நிகழ்ச்சியில் நாம் பார்க்க வேண்டிய கேள்வி என்னவென்றால், இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்றும் மனுஷ குமரன் என்றும் சொல்லிகொண்டார் என்று நமக்கு எப்படி தெரியும்? சரி, இப்போதும் இதன் மையப்பகுதியை நாம் நெருங்கி கொண்டு இருக்கிறோம் இயேசு இவைகளை சொல்லியிருப்பதால், கிறிஸ்துவின் தெய்வத்துவம் என்ற போதனைக்கு காரணகர்த்தா பவுல் இல்லை என்பது தெளிவாகிறது.

****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.